# Summaries in Tamil

**உளசமூகத் தலையீடுகள் அல்லது நன்நிலைக்கான இணைந்த திட்டமிடல்?**

கடந்த இருபத்தைந்து வருடங்களாக இடம்பெறுகின்ற மனிதாபிமான நிகழ்ச்சித் திட்டங்களிலே, முரண்பாட்டினுடைய உளவியல் மற்றும் சமூகவியல் தாக்கங்கள் பற்றி அதிகளவு கவனயீர்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. அத்துடன் உளசமூகப் பிரச்சினைகளைக் கையாள்வதற்கெனப் பலவகையான அணுகுமுறைகளும் விருத்தியடைந்திருக்கின்றன. இவ்வாறான அணுகுமுறைகளைப் பிரித்து, ஒரு தனியான துறைசார் நடவடிக்கைகள் என அடையாளமிடுவது கருத்து நிலையிலோ அல்லது நிகழ்ச்சித் திட்டங்களிலோ எந்தவிதமாகவும் உதவப்போவதில்லையென இந்தக் கட்டுரையாளர்கள் விவாதிக்கின்றார்கள். மேலும், ஆயதமுரண்பாட்டால் பாதிக்கப்பட்ட எந்தவொரு சமூகத்தினுடைய உளசமூக, உயிரியல் மற்றும் பௌதீகரீதியிலான நன்நிலைக்கு உதவுவதான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களினிடையே ஒரு நெருங்கிய, நடைமுறைச் சாத்தியமான ஒருங்கிணைப்புத் தேவைப்படுகின்றது. பாதுகாப்பு, பங்களிப்பு மற்றும் நன்நிலைக்கான பல கூறுகளுடனான மேம்பாடு என்பவை இணைந்த ஒரு சட்டக வரைபையும் இந்தக் கட்டுரை கொண்டிருக்கின்றது. எல்லா விதமான தலையீடுகளிலேயும், மனிதாபிமானப் பணிகளிலே உளசமூகப் பிரச்சினைகளுக்கான கவனயீர்ப்பை ஏற்படுத்துவதான, ஒரு இணைந்த பார்வையுடைய அணுகுமுறை முன்மொழியப்படுகின்றது. ஆகவே, ''ஒரு உளசமூகத் தலையீட்டிலுள்ள அம்சங்கள் எவை?'' என்பதைவிட, ''மனிதாபிமானத் தலையீடுகள் இணைந்து எவ்வாறு ஒட்டுமொத்தமானதொரு நன்நிலையை மேம்படுத்துகின்றன?'' என்பதே முக்கியமான வினாவாக அமைகின்றது. கள அனுபவங்களிலிருந்து பெறப்பட்ட பலவிடயங்கள் இந்தக் கட்டுரை முழுவதிலும் விரவிக் காணப்படுகின்றன.

**முக்கியமான சொற்பதங்கள்:** உளசமூகம், உளசமூகத் தலையீடுகள், உளசமூக நன்நிலை, மனிதாபிமானம், உயிரியல், சமூகவியல், ஆத்மீகம், உணர்ச்சி, மனம், பண்பாடு, ஆய்வு, திட்டமிடல், தேவைகள், உரிமைகள்

---

**ஒரு நோக்கத்துடன் கூடிய வன்முறை: கொங்கோ ஜனநாயகக் குடியரசிலே வன்முறைகளின் தொழிற்பாட்டையும் அர்த்தத்தையும் ஆராய்தல்**

உபசகாரா ஆபிரிக்காவிலே, ஆயுத முரண்பாடு தொடர்ந்துகொண்டிருக்கும் நிலைமைகளிலே, கிளர்ச்சியாளர்களின் வன்முறைகளை 'எல்லோரும் எல்லோருக்கும் எதிரான' ஒரு பிரயோசனமற்ற யுத்தமாகக் கருதுகின்ற ஒரு போக்கு நிலவுகின்றது. அநேகமான சந்தர்ப்பங்களிலே, இந்த வன்முறைகள் போதைவஸ்துப் பாவித்த - துப்பாக்கிகளைத் தூக்கிய இளைஞர்கள், திட்டமிடப்பட்ட வகையில் கொள்ளையடிப்பதற்காக அப்பாவிக் குடிமக்களைத் துன்புறுத்துவதான காட்சிகளாகவே சித்திரிக்கப்படுகின்றது. எவ்வளவு பிரயோசனமில்லாதது போலத் தோன்றினாலும், வன்முறையானது தனக்கேயுரியதான தொழிற்பாட்டைக் கொண்டிருக்கிறது. அது அரசியல் கட்டுப்பாட்டுக்கான கோட்பாடுகளைப் பராமரிப்பதுடன், தனக்கேயுரியதான சமூகப் பரிமாணத்தையும், அடையாளத்தையும் கொண்டிருக்கிறது.

இந்தக் கட்டுரையானது கொங்கோ நாட்டின் கிராமங்களில் காணப்படும் வன்முறைகளின் அரசியல் மற்றும் சமூக உளவியற் தொழிற்பாடுகளை ஆராய்கின்றது. ஆய்வாளர்கள் அதிக அளவிலே களஆய்வுகளை மேற்கொண்ட வட, தென் கிவு மாநிலங்களையும், ‘இருறி’ யையும் குவியப்படுத்துகிறது. அவர்களது ஆய்வுகள் குறிப்பாகத் தற்போதுள்ள குலைவு மற்றும் மீள இணைந்து கொள்ளலுக்கான முயற்சிகளை உள்ளடக்கிய கொங்கோவின் நிலைமாறும் பருவத்தை அடிப்படையாகக் கொண்டாலும், அவை இதுவரையில் மட்டுப்படுத்தப்பட்ட பலன்களையே தந்திருக்கிறது. இந்த அரசியல் மற்றும் சமூக உளவியல் ஆய்வுகளுக்கு அப்பாலே இந்த ஆய்வாளர்கள் தொழிற்பாட்டு வன்முறைகளுக்குள்ளான கொங்கோவிலே, முன்னைய படைவீரர்கள் சமூகத்துடன் மீள இணைந்து, அரசியல் சமூக மாற்றங்களோடு தங்களையும் இணைத்துக் கொள்வதற்கான சில மாற்றுத் திட்டங்களையும் முன்மொழிகின்றார்கள்.

**முக்கிய சொற்பதங்கள்:** உள்ளூர் முரண்பாடு, முரண்பாடு தீர்த்தல், கொங்கோ ஜனநாயகக் குடியரசு, குலைவு, மீள இணைந்து கொள்ளல்

---

## ரொட்டியும் றோசாப்பூக்களும்: பல்கலாசாரக்குழு ஒன்றில் அகதிப் பெண்களுக்கு ஆதரவாக இருத்தல்

இந்தக் கள அறிக்கையானது, தென்னாபிரிக்காவிலுள்ள ‘ஜொகனஸ் பேர்க்’ எனும் இடத்தில் அமைந்திருக்கின்ற புகலிடம் ஒன்றில் பல கலாசாரங்களையுடைய, பல மொழிகளைப் பேசுகின்ற ஆபிரிக்கப் பெண்களின் சிகிச்சைக்குழு ஒன்றுடன் வாராந்தம் இடம்பெறுகின்ற ஆதரவு மற்றும் மீளிணக்கப்பாட்டு வேலையைப்பற்றி விவரிக்கின்றது. பங்குபற்றியவர்களின் பிரச்சினைகள், சிகிச்சை ரீதியான அணுகுமுறைகள் (குழு உருவாக்கப் பயிற்சிகள், நெறிப்படுத்தப்பட்ட கற்பனைகள், கதை சொல்லல், படம் கீறுதல், மாதிரியமைத்தல், கலந்துரையாடல் போன்றன) மற்றும் அவர்களில் ஏற்பட்ட தாக்கங்கள் பற்றி விவாதிக்கப்படுகின்றது.

**முக்கிய சொற்பதங்கள்:** மீளிணக்கப்பாடு, ஆதரவு

---

## ஒரு யுத்தப் பிரதேசத்திலே சுனாமி ஏற்படுத்திய உளசமூகத் தாக்கங்கள்: வட இலங்கையிலிருந்து பெற்ற அனுபவங்கள்

வட இலங்கையில், யுத்தத்தினால் கந்தலாகிப்போன யாழ்ப்பாண நகரைச் சுனாமி தாக்கிய மூன்றாம் நாளிலே, உளநலப் பணிக்குழு ஒன்று உருவாக்கப்பட்டது. இந்தக் கள அறிக்கையிலே, பதினெட்டு மனிதாபிமான அமைப்புகள் கூட்டுச்சேர்ந்து உருவான அப்பணிக்குழுவின் அணுகுமுறைமைகள் பற்றி விவரிக்கப்படுகின்றது.

**முக்கியமான சொற்பதங்கள்:** சுனாமி, உளவியல் முதலுதவி

---

## பாகிஸ்தானிலிருக்கும் ஆப்கான் அகதிகளுடைய உளநலம்: ஒரு விரைவான பண்பறிக் களஆய்வு

கடந்த இருபது வருடங்களில் உலகிலே மிக அதிகளவிலே இடம்பெயர்ந்தவர்களாக ஆப்கானியர்களே இருப்பார்கள். இவர்களில் ஒரு பெரிய தொகுதியினர் அண்டை நாடான பாகிஸ்தானிலே அடைக்கலம் புகுந்தார்கள். இந்த ஆப்கானியர்கள்

யுத்தத்தினாலும், அதனுடைய விளைவுகளாலும் கற்பனைபண்ண முடியாத துன்பதுயரங்களை அனுபவித்திருக்கின்றார்கள். அகதிகளைப் பராமரிப்பதிலே உளநலம் என்பது ஒரு முக்கியமான விடயமாக இருந்தாலும், ஆப்கான் அகதிகளுடைய உளநலம் மற்றும் நன்நிலை பற்றியதான எந்தவிதமான ஆய்வுகளும் இதுவரை முறையாகச் செய்யப்படவில்லை. இந்தப் பண்பறி ஆய்வானது, பாகிஸ்தானின் கராச்சியிலுள்ள அகதிமுகாம் ஒன்றிலே, உளநலத்திலே செல்வாக்குச் செலுத்தும் கூட்டுக் காரணிகளைப் பற்றிய சில புரிந்துகொள்ளல்களைப் பெறமுயல்கின்றது. கஷ்டங்களை ஏற்படுத்தும் காரணிகள், அவை வெளிப்படுத்தப்படும் முறைகள் என்பவற்றுடன், அவற்றை இந்த முகாமிலுள்ள அகதிகள் எதிர்கொள்ளும் சில வழிமுறைகள் பற்றியும் நாங்கள் கூறுகின்றோம். இந்த அவதானிப்புகளினடியாகச் சில சிபாரிசுகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

**முக்கியமான சொற்பதங்கள்:** ஆப்கான் அகதிகள், உளநலம், கஷ்டங்கள், எதிர்கொள்ளல், தலையீடு

---

**‘பித்து’ உளவியலாளர்களிடமிருந்து எதனைக் கற்றுக்கொள்ளலாம்? குவாட்டமாலாவில் முரண்பாட்டிற்குப் பின்னர் இடம்பெறுகின்ற ஒரு சமுதாய அணுகுமுறையிலான உளசமூக ஆதரவு**

இந்தக் கட்டுரையானது, குவாட்டமாலாவில், முரண்பாட்டிற்குப் பின்னரான காலப் பகுதியில் நடைபெறுகின்ற ஒழுங்குபடுத்தப்பட்ட வன்முறைகள், சித்திரவதைகள் என்பவற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவளிப்பதான ஒரு சமுதாய அணுகுமுறையைப் பற்றிக் கூறுகின்றது. சமூக ஆதரவுத் தொகுதிகளை நம்பிக்கையினடிப்படையில் உற்சாகத்தோடு கட்டியெழுப்புவதனையும், மனிதர்களிடையே உறவுகளை மீள ஏற்படுத்துவதையும் இலக்கு வைத்து நடைமுறைப்படுத்தப்படும் ODHAG-RCT நிகழ்ச்சியினுடைய செயன்முறைகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதனை, பெண்களுக்கான பிரதிபலிப்புக் குழு ஒன்றில் இடம்பெற்ற குவியக்குழுக் கலந்துரையாடலின் அவதானிப்புகள் மூலம் வெளிக்காட்டப்பட்டிருக்கின்றது. இந்த சமுதாய அணுகுமுறையானது, சுகாதாரப் பிரச்சினைகளை ஒரு நுழைவுப் புள்ளியாகப் பயன்படுத்தினாலும், அதனுடைய இலக்கானது சுகாதாரம் தொடர்புடைய பிரச்சினைகளைக் குறைப்பதுடன் மட்டும் அடங்கிவிடவில்லை. மாறாக, சமூக - அரசியல் நிலைமாற்றங்களைத் தாங்கக் கூடியதான சமூக அமைப்புகளை உருவாக்குவதனையே அது தனது இலக்காகக் கொண்டிருக்கின்றது.

**முக்கியமான சொற்பதங்கள்:** சமூக ஆதரவு, சமுதாய உளவியல், சித்திரவதையினின்றும் தப்பிப் பிழைத்தோர்